


dinakani2023@gmail.com


RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 304 | 4 Pages | 30.5.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 304 | 4 பக்கங்கள் | 30.5.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**செல்லிடத்துக்காப்பான்சினங்காப்பான்அல்லிடத்துக் காக்கினென் காவாக்கா லென்**

**விளக்கம்:**

**பலிக்கும்இடத்தில்சினம்வராமல்காப்பவனே சினம்காப்பவன்,பலிக்காதஇடத்தில்காத்தால் என்ன, காக்கா விட்டால் என்ன?**

## பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மக்கள் இந்தியா திரும்பும் நாள் வெகுதொலைவில் இல்லை ராஜ்நாத் சிங்



புதுடெல்லி, மே.30

புதுடெல்லியில் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட மத்திய பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் பேசியதாவது:மேட் இன் இந்தியா எனும் திட்டம்தான் நாட்டிற்கு மிகப்பெரிய பாதுகாப்பை அளிக்கிறது. இந்தத் திறன் நம்மிடம் இல்லையென்றால் பாகிஸ்தானுக்கு எதிராக இவ்வளவு பெரிய நடவடிக்கையை எடுத்திருக்க முடியாது.

முதலில் பயங்கரவாத மறைவிடங்களை அழித்தோம். பின்னர் விமானத் தளங்களை அழித்தோம். நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செய்திருக்கலாம். ஆனால் அதிகாரத்துடன் கட்டுப்பாடும் இருந்திருக்க வேண்டும். நாம் நிதானத்தைக் கடைப்பிடித்தோம்.

இன்று பயங்கரவாதத்தின் விளைவை பாகிஸ்தான் உணர்ந்துள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை நாங்கள் மாற்றியிருக்கிறோம். இனிமேல் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடக்கும்போது பயங்கரவாதம்மற்றும்பாகிஸ்தான்ஆக்கிரமிப்புகாஷ்மீர்பற்றிமட்டுமேபேசுவோம். பாகிஸ்தானுடன் வேறு எந்தப் பேச்சுவார்த்தையும் இருக்காது.


பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி மக்கள் சுயமரியாதையுடனும் தங்கள் சொந்த விருப்பத்துடனும் இந்தியாவில் சேரும் நாள் வெகுதொலைவில் இல்லை. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி மக்கள் நம்முடையவர்கள். அவர்கள் நம் குடும்பத்தின் ஒரு பகுதியினர். பிரதமரின் 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற தொலைநோக்குப் பார்வையில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இன்று புவியியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கும் சகோதரர்கள், ஒரு நாள் நிச்சயமாக சுயமரியாதையுடனும் தங்கள் சொந்த விருப்பத்துடனும் இந்தியாவுக்கு வருவார்கள்.பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பெரும்பாலான மக்கள் இந்தியாவுடன் ஆழ்ந்த தொடர்பை கொண்டுள்ளார்கள். அவர்களில் சிலர் மட்டுமே தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி 10 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.1,000 கோடிக்கும் குறைவாக இருந்தது, ஆனால் இப்போது ரூ.23,500 கோடி என்ற சாதனை அளவை எட்டியுள்ளது.இன்று, நாம் போர் விமானங்களையோ அல்லது ஏவுகணை அமைப்புகளையோ மட்டும் உருவாக்கவில்லை, மேலும் புதிய யுக போர் தொழில்நுட்பத்திற்கும் தயாராகி வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டவர்களுக்கு ஆபரேஷன் சிந்தூர் சரியான பதிலடி பிரதமர் மோடி



புதுடெல்லி, மே.30

பிரதமர் நரேந்திர மோடி இன்றும் நாளையும் சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட 4 மாநிலங்களுக்கு பயணம் செய்ய திட்டமிட்டிருந்தார். சிக்கிம் உருவாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் இன்று காலை கலந்துகொள்ள திட்டமிட்டிருந்தார்.

இதற்காக சிக்கிமின் கேங்டாக்கில் மிகப்பெரிய அளவில் விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காலை 11 மணிக்கு தொடங்கும் நிகழ்வு ஒரு மணிநேரம் முன்னதாக காலை 10 மணிக்கே தொடங்கும் என்றுதெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், திடீரென்று மோசமான வானிலை காரணமாக பிரதமர் மோடியின் பயணம் ரத்து செய்யப்பட்டது. மக்கள் மத்தியில் மேற்கு வங்காளத்தின் பாக்டோக்ராவிலிருந்து இருந்து காணொலி காட்சி மூலம் அவர் உரையாற்றியதாவது:

சிக்கிம் இமயமலையின் மாநிலம் அது "நாட்டின் பெருமை" அந்த மாநிலத்தின் மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். கடந்த மாதம் பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியாவில் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டவர்களுக்கு ஆபரேஷன் சிந்தூர் ஒரு சரியான பதிலடி. பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் நாடு ஒன்றுபட்டுள்ளது. இந்தியா வல்லரசாக மாற்றுவதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. சிக்கிம் இயற்கைப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரித்து வருகிறது, இது மாநிலத்திற்கு கிடைத்த ஒரு பெரிய சாதனை ஆகும். சிக்கிம் இயற்கை பாதுகாப்பில் முன்மாதிரியாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## கேரள லாட்டரியில் ரூ.12 கோடி பரிசு: விஷு பம்பர் டிக்கெட் முடிவுகள் வெளியீடு

திருவனந்தபுரம், மே.30

கேரளாவில் விஷு பம்பர் லாட்டரி டிக்கெட்டின் குலுக்கல் நேற்று நடைபெற்றது. ரூ.300 விலை கொண்ட இந்த லாட்டரி டிக்கெட்டிற்கு முதல் பரிசாக ரூ.12 கோடி வழங்கப்படுகிறது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இந்த டிக்கெட்டுகள் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இரண்டு மாதங்களாக விறுவிறுப்பாக டிக்கெட் விற்பனை நடைபெற்று வந்தது. 45 லட்சம் டிக்கெட்டுகள் அச்சிடப்பட்ட நிலையில், சுமார் 43 லட்சம் டிக்கெட்டுகள் விற்று தீர்ந்தன. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த லாட்டரி டிக்கெட்டிற்கான குலுக்கல் மே 28ந் தேதி நடைபெறும் என்று கேரள லாட்டரிதுறை அறிவித்து இருந்தது. இதன்படி, இந்த டிக்கெட்டிற்கான குலுக்கல் நேற்றுறு நடைபெற்றது. இதில் முதல் பரிசாக ரூ. 12 கோடி VD 204266 என்ற எண்ணிற்கு விழுந்துள்ளது. இரண்டாவது பரிசாக ரூ.1 கோடி 6 டிக்கெட்டுகளுக்கு அளிக்கப்படுகிறது. VA 699731, VB 207068, VC 263289, VD 277650 , VE 758876, VG 203046 என்ற எண்களுக்கு இரண்டாவது பரிசு வழங்கப்படுகிறது.முதல்பரிசுவிழுந்தடிக்கெட்கேரளமாநிலம்கோழிக்கோடு மாவட்டத்தில் வாங்கப்பட்டது என தெரியவந்துள்ளது.

# செங்கல்பட்டில் ரூ.525 கோடியில் கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்: முதல்அமைச்சர் அடிக்கல் நாட்டினார்

செங்கல்பட்டு, மே.30

★ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்இன்று(29.5.2025)தலைமைச்செயலகத்தில், பொதுப்பணித் துறைசார்பில்செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப் பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

★ அத்துடன், வேளாண்மை விரிவாக்க சேவைகளை உழவர்களுக்கு அவர்களின் கிராமங்களிலேயே வழங்கிடும் வகையில் "உழவரைத் தேடி வேளாண்மைஉழவர் நலத் துறை" திட்டத்தினை காணொலிக் காட்சி வாயிலாக திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டாரம், மாணிக்கமங்கலம் கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

★ அதைத் தொடர்ந்து நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைசார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 424 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை – இராசிபுரம் – திருச்செங்கோடுஈரோடு சாலை, மதுரை மாவட்டம், பழங்காநத்தத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக 68 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கத்தில் 6 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினருக்கான மறுகுடியமர்வு குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.



★ மேலும், 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முகாம் வாழ் இலங்கைத்தமிழர்களுள் 9 மாணவ, மாணவியர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார்

★ அதன் பின்னர், மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நிர்வாக சீர்திருத்த முன்னெடுப்பின் மூலமாக "எளிமை ஆளுமை" திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் சுகாதார சான்றிதழ், பொது கட்டிட உரிமம், முதியோர் இல்லங்கள் உரிமம், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமம், மகளிர் இல்லங்கள் உரிமம், சொத்து மதிப்பு சான்றிதழ், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல், புன்செய் நிலங்களை விவசாயம் அல்லாத செயல்பாட்டிற்கு பயன்படுத்த தடையின்மை சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ், அரசாங்க ஊழியர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கான தடையின்மை சான்றிதழ் ஆகிய பத்து சேவைகளின் நடைமுறைகளை எளிமையாக்கி மக்கள் பயன்பாட்டிற்காக இணையவழி சேவையை தொடங்கி வைத்தார்.

## காமராஜர் பிறந்த நாள் விழாவின் போது அரசின் சார்பில் ஒய்வு பெற்ற ஆசிரியர்களை பாராட்ட வேண்டும் ஆசிரியர் நலச்சங்கம் கோரிக்கை

சுரண்டை

தென்காசி மாவட்டம் பங்களாச் சுரண்டை பேரன் புரூக் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஆசிரியர் நலச்சங்கம் சார்பில் ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது

விழாவிற்கு பொதுநல மன்ற நிர்வாகி ஆறுமுகம் தலைமை வகித்தார் நகர காங்கிரஸ் தலைவர் ஜெயபால், முன்னிலை வகித்தார் வெள்ளகால் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் காமராஜ் வரவேற்றார் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஆசிரியர் நலச்சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் சார்லஸ் தொடக்கவுரை நிகழ்த்தினார்.



சுரண்டை நகராட்சி சேர்மன் வள்ளிமுருகன் ஒய்வு பெற்ற ஆசிரியர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கினார் இலஞ்சி டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் பிஎட் கல்லூரி தாளாளர் ராஜகுமார் சிறப்பரையாற்றினார் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்க மாவட்ட பொருளாளர் ஞானதுரை, தமிழ்நாடு பட்டதாரி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்ட தலைவர் கிருபா சம்பத், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஆசிரியர்நலச்சங்கமாநில பொறுப்பாளர் மணிமாறன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கூட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினத்தில் ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்குதமிழ்நாடு அரசு சார்பில் ஒவ்வொரு மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மக்கள் பிரதிநிதிகள்மூலம்பாராட்டுவிழா நடத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பங்களாச்சுரண்டை பேரன்புரூக் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஹெலன் கிருபா ஏற்புரை நிகழ்த்தினார் மேலப் பட்டமுடையார்புரம் டிடிடிஏ பள்ளி தலைமையாசிரியர் டேவிட்சன் நன்றி கூறினார்

## சிறந்த நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க செயற்குழு உறுப்பினரும், தென்னிந்திய நடிகர் சங்க அறக்கட்டளை குழு உறுப்பினருமான ராஜேஷ் காலமானார்

திரையுலகில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேல் எண்ணற்ற கதாபாத்திரங்களின் மூலம் மக்களை நெகிழ வைத்து சிந்திக்க வைத்து சக கலைஞர்கள் மற்றும் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற ஆகச் சிறந்த நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க செயற்குழு உறுப்பினரும், தென்னிந்திய நடிகர் சங்க அறக்கட்டளை குழு உறுப்பினருமான திரு. ராஜேஷ் அவர்கள் இன்று காலை இயற்கை எய்தியது அறிந்து அளப்பரிய அதிர்ச்சிக்கும், சொல்லொண்ணா ஆழ்ந்த துயரத்திற்கும் ஆளாகியுள்ளோம். அவரது அகால மறைவு எக்காலத்திலும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். தமிழில் 150க்கும் மேற்பட்ட



திரைப்படங்களில் நடித்த அவர், சமூக வலைத்தளங்களில் தனது சமுதாய விழிப்புணர்வு பேட்டிகள் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த தகவல் பகிர்வுகளாலும் எண்ணற்றவர்களுக்கு ஊக்கமும் வழிகாட்டுதலும் வழங்கியது அவரது தன்னலம் கருதா சமுதாயப் பொதுநோக்கு பார்வைக்கான சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அவரது மறைவு திரையுலகிற்கும், குறிப்பாக தென்னிந்திய நடிகர்சங்கத்திற்கும் ஒரு நிரந்தர இழப்பாகும். அவரது மறைவால் இழந்து வாடும் குடும்பத்தாருக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். அவரது புகழ் நீடூழி நிலைத்திருக்க வேண்டுகிறோம்.

## இராஜபாளையம் தொகுதியில் புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட கலெக்டர் தலைமையில் அமைச்சர் KKSSR.இராமச்சந்திரன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்

இராஜபாளையம் தொகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தில் (2022, 23) 2.90 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்த காந்திஜி நூற்றாண்டு நினைவு பேருந்து நிலையத்தை காணொளிக் காட்சி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார், அதனைத் தொடர்ந்து பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் V.P.ஜெயசீலன். தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு KKSSR.இராமச்சந்திரன் அவர்கள் குத்துவிளக்கேற்றி சிறப்பித்து பேருந்தை பச்சைக் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.



இவ்விழாவில் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திமுக ஆட்சி அமைந்தபின்தான் இராஜபாளையம் தொகுதிக்கு இணைப்புச்சாலைத் திட்டம் ரயில்வே மேம்பாலம் தாமிரபரணி குடிநீர்த்திட்டம் மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் திட்டம் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி தொகுதியை வளர்ச்சி பாதை நோக்கி கொண்டு சென்று வருகிறோம் எனவும் அடுத்தும் தமிழ்நாட்டில் மீண்டும் திமுக ஆட்சி மலரும் எனவும் அதற்கு அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீகுமார்.,MP அவர்கள், இராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினர் S.தங்கப்பாண்டியன்.,MLAஅவர்கள்வாரியத்துணைத்தலைவர் ராசாஅருண்மொழி அவர்கள் நகராட்சி சேர்மன் பவித்ராஷியாம் அவர்கள் தனுஷ் M.குமார்.,Ex. MP நகர செயலாளர் (தெற்கு) ராமமூர்த்தி அவர்கள் முன்னாள் ஒன்றிய சேர்மன் சிங்கராஜ் பொதுக்குழு உறுப்பினர் கனகராஜ் நகராட்சி துணை சேர்மன் கல்பனாகுழந்தைவேலு ஒன்றியதுணை சேர்மன் துரைகற்பகராஜ் பேரூர் சேர்மன்கள் ஜெயமுருகன் பாலசுப்பிரமணியன் பேரூர் கழக செயலாளர் இளங்கோவன் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சுமதிராமமூர்த்தி மாவட்ட மீனவரணி அமைப்பாளர் நவமணி ஒன்றிய செயலாளர் சரவணமுருகன் நகர்மன்ற உறுப்பினர்கள் ஒன்றிய பேரூர் நகர் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.




# நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கொட்டுது மழை; பெரியாறு அணை நீர்மட்டம் 4 நாள்களில் 4 அடி உயர்வு: 5 மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

சென்னை, மே.30

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

"நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் நகரில் நெரிசலை குறைத்திடும் வகையில் 3.40 கி.மீ தொலைவுக்கு கட்டப்பட்டுள்ள பாலத்தின் பல இடங்களில் விரிசல்கள் ஏற்பட்டிருப்பதும், சுற்றுச் சுவரின் கற்கள் பெயர்ந்து விழுவதும் அங்குள்ள மக்களிடம் பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன. ரூ.320 கோடியில் கட்டப்பட்டுள்ள அந்த மேம்பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை தான் திறந்து வைத்தநிலையில், அதற்கு முன்பாகவே பாலம் சேதமடைந்திருப்பது கட்டுமானப் பணிகளின் தரமற்றத் தன்மையைத் தான் காட்டுகின்றன.



பள்ளிப்பாளையம் பாலம் சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் கட்டப்பட்டுள்ளது. பன்னாட்டு வங்கிகளின் நிதியுதவியுடன் பாலம் கட்டப்படும் போது கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து தரத்தை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை ஆகும். அவ்வாறு ஆய்வுகள் செய்யப்பட்டிருந்தால் பாலம் சேதமடைந்திருக்க வாய்ப்பில்லை. இந்த கோணத்தில் பார்க்கும் போது பாலத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டது முதலே அதில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கக் கூடும் என்று பள்ளிப்பாளையம் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கட்டப்பட்ட பாலங்கள், சாலைகள் ஆகியவற்றின் தரம் குறித்து தொடர்ந்து புகார்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ.15.90 கோடியில் கட்டப்பட்ட பாலம் அடுத்த 3 மாதங்களில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. அணையிலிருந்து ஒரே நேரத்தில் தண்ணீர் திறந்து விடப்பட்டது தான் இதற்குக் காரணம் என்று கூறி அரசு தப்பிவிட்டது.

ரூ.320 கோடியில் கட்டப்பட்ட பாலம் திறக்கப்படுவதற்கு முன்பே சேதமடைவது இயல்பானது அல்ல. பாலத்தைக் கட்டுவதில் நடந்த ஊழலும், அதன் காரணமாக நடந்த தரமற்ற கட்டுமானப் பணிகளும் இதற்குக் காரணமாக இருக்க முடியும். எனவே, பள்ளிப்பாளையம் பாலத்தைக் கட்டுவதில் நடந்த ஊழல் குறித்து விசாரணை நடத்த ஆணையிட வேண்டும். பள்ளிப்பாளையம் மேம்பாலம் போக்குவரத்திற்கு திறக்கப்பட்டுள்ள நிலையில், அது போக்குவரத்திற்கு உகந்தது தானா? என்பது குறித்த பாதுகாப்பு தர ஆய்வுகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பிளஸ்2 தேர்வில் மகன் குறைவாக மதிப்பெண் எடுத்ததால் விபரீதம்.. பெண் டாக்டர் செயலால் அதிர்ச்சி



வேலூர், மே.30

வேலூர் காட்பாடி கோபாலபுரம் பகுதியை சேர்ந்தவர் காமேஷ். இவருடைய மனைவி சுமித்ரா (வயது 44). பல் டாக்டர்களான இருவரும் காந்திநகரில் பல் கிளினிக் நடத்தி வருகின்றனர். இவர்களின் மகன் தனகார்த்திக்(17) பிளஸ்2 பொதுத்தேர்வில் குறைவான மதிப்பெண்கள் எடுத்துள்ளார்.

டாக்டர் தம்பதியினர் தங்களை போன்று மகனையும் டாக்டருக்கு படிக்க வைக்க வேண்டும் என்று நினைத்திருந்தனர். ஆனால் அவன் எதிர்பார்த்ததைவிட தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றிருந்ததால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இதுதொடர்பாக சுமித்ராவிற்கும், அவரது மகனுக்கும் இடையே அவ்வப்போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 26ந்தேதி சுமித்ரா பொதுத்தேர்வில் மதிப்பெண் குறைவாக எடுத்தது தொடர்பாக மீண்டும் மகனை சத்தம் போட்டதாகவும், அதனால் அவன் நேற்று முன்தினம் எதுவும் சாப்பிடாமலும், யாரிடமும் பேசாமல் இருந்ததாகவும் கூறப்படுகிறது. அதனால் சுமித்ரா மனமுடைந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கணவன்மனைவி மற்றும் மகன் ஆகியோர் வழக்கம் போல் தூங்க சென்றனர். நேற்று காலை காமேஷ் எழுந்து பார்த்த போது சுமித்ராவை வீட்டில் காணவில்லை. அதனால் அதிர்ச்சி அடைந்த அவர் வீட்டின் பின்பகுதிக்கு சென்று பார்த்தார்.

அங்குள்ள மேற்கூரை இரும்பு கம்பியில் சுமித்ரா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும் அவரது உடலை பார்த்து கதறி அழுதார்.

தகவலின்பேரில் விருதம்பட்டு போலீசார் அங்கு சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடியில் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் அமைக்க மானியம்: கலெக்டர் இளம்பகவத் தகவல்

தூத்துக்குடி மே.30

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:




தமிழகத்தில் தொழில் முனைவோர்களை ஊக்குவித்து மீன்வளம் சார்ந்த தொழிலில் அதிக முதலீடு செய்திடும் நோக்கில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் அமைத்திட மானியம் வழங்குகிறது. 50 டன் உற்பத்தி திறன் கொண்ட பனிக்கட்டி நிலையம் அமைப்பதற்கான மொத்த மதிப்பீடு ரூ.150 லட்சம். 30 டன் உற்பத்தி திறன் கொண்ட பனிக்கட்டி நிலையம் அமைப்பதற்கான மொத்த மதிப்பீடு ரூ.120 லட்சம் மற்றும் 20 டன் உற்பத்தி திறன் கொண்ட பனிக்கட்டி நிலையம் அமைப்பதற்கான மொத்த மதிப்பீடு ரூ.80 லட்சம் செலவினத் தொகையில் பொதுப்பிரிவினருக்கு 40 சதவீத மானியம் மற்றும் மகளிர் ஆதிதிராவிடர் பிரிவினருக்கு 60 சதவீத மானியத் தொகையானது பனிக்கட்டி நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் வழங்கப்படுகிறது.

மேலும், ஒருங்கிணைந்த வண்ணமீன் வளர்ப்பு அலகு செலவினத்தொகை ரூ.30 லட்சத்தில் பொதுப்பிரிவு மானியத்தொகை 40 சதவீதம் வழங்கப்படுகிறது. எனவே இத்திட்டங்களின் கீழ் பயனடைய விருப்பமுள்ள நபர்கள் உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, வடக்கு கடற்கரை சாலை, மீன்வளத்துறை வளாகம், தூத்துக்குடி என்ற முகவரியில் வேலை நாட்களில் நேரில் தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 0461 2320458 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பெண் குளித்ததை பார்த்த வாலிபர்.. அடுத்து நடந்த சம்பவத்தால் விபரீதம்

தஞ்சாவூர் மே.30

தஞ்சை மாவட்டம் கபிஸ்தலம் அருகே உள்ள வெல்லம், சர்க்கரை தயாரிக்கும் கூடம் ஒன்றில், கர்நாடக மாநிலம் மானக்கள்ளி கணேஷ்புரா பகுதியை சேர்ந்த அமல்ராஜ் (வயது 28) என்பவர் வேலை பார்த்து வந்தார். இவருடன் சக பணியாளர்களும் அங்குதங்கி வேலை பார்த்து வருகிறார்கள்.


சம்பவத்தன்று அங்கு பணியாற்றும் ஒருவரின் மனைவி குளித்து உள்ளார். அந்த பெண் குளித்ததை அமல்ராஜ் பார்த்துள்ளார்.

தான் குளித்ததை அமல்ராஜ் பார்த்ததை அறிந்த அந்தப் பெண் உடனடியாக அமல்ராஜின் அக்கா மற்றும் அவரது கணவரிடம் செல்போன் மூலம் தகவல் தெரிவித்துள்ளார். இதை அறிந்த அமல்ராஜின் அக்கா மற்றும் அவரது கணவர் ஆகிய இருவரும் செல்போனில் தொடர்பு கொண்டு அமல்ராஜை திட்டி உள்ளனர்.

இதனால் மனமுடைந்த அமல்ராஜ் தன்னுடன் பணியாற்றுபவர்களிடம் அருகில் உள்ள மாட்டுக் கொட்டகையில் படுக்க செல்வதாக கூறி விட்டு சென்றுள்ளார். காலையில் அனைவரும் எழுந்து பார்த்தபோது மாட்டு கொட்டகையில் இருந்த கொய்யாமரத்தில் மாடு கட்டும் கயிறால் அமல்ராஜ் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது.

இதுகுறித்த புகாரின் பேரில் கபிஸ்தலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தற்கொலை செய்து கொண்ட அமல்ராஜ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# ஏர்வாடி தர்காவில் மத நல்லிணக்க சந்தனக்கூடு திருவிழா நிறைவு



ராமநாதபுரம், மே.30

ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி தர்காவில் 851வது ஆண்டு மத நல்லிணக்க சந்தனக்கூடு திருவிழா கடந்த மாதம் 29ந் தேதி தர்கா ஹக்தார் நிர்வாக சபையினர் தலைமையில் ஆலிம் உலமாக்கள் முன்னிலையில் தொடங்கியது. 9ந் தேதி ஏர்வாடி முஜாஹிர் நல்ல இபுராஹீம் மகாலில் இருந்து யானை, குதிரை, ஒட்டகங்களுடன் கொடி ஊர்வலம் தர்காவை வந்தடைந்தது.

ராமநாதபுரம் மாவட்ட டவுன் காஜி தலைமையில் சிறப்பு பிரார்த்தனை செய்யப்பட்டு இரவு 7 மணி அளவில் கொடியேற்றம் நடைபெற்றது. 21ந் தேதி மாலை மத நல்லிணக்க சந்தனக்கூடு திருவிழா தொடங்கி மறுநாள் அதிகாலை தர்கா மக்பராவில் சந்தனம் பூசும் நிகழ்ச்சி நடந்தது.


அதைதொடர்ந்துநேற்று மாலை 5.30 மணியளவில் ராமநாதபுரம் மாவட்ட காஜி சலாஹூத்தீன் ஆலிம் ஜமாலி பாஷில் உமரி தலைமையில் உலக நன்மைக்காகவும் அமைதிக்காகவும் சிறப்பு பிரார்த்தனை செய்யப்பட்டு கொடி இறக்கத்துடன் விழா நிறைவடைந்தது. அதை தொடர்ந்து மவுலீது ஓதி, 4 ஆயிரம் கிலோ அரிசியில் நெய் சோறு நேர்ச்சையாக வழங்கப்பட்டது. இதில் தமிழகம் மட்டுமின்றி அக்கம், பக்கத்து மாநிலத்தில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை ஏர்வாடி தர்கா ஹக்தார் நிர்வாக சபை தலைவர் அகமது இப்ராஹிம், செயலாளர் சித்திக் லெவ்வை, உதவி தலைவர் முகம்மது சுல்தான் மற்றும் நிர்வாக சபையினர் செய்திருந்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை ராமநாதபுரம் மாவட்ட சூப்பிரண்டு சந்தீஷ் உத்தரவின் பேரில் கீழக்கரை துணை சூப்பிரண்டு பாஸ்கரன் தலைமையில் போலீசார் செய்திருந்தனர்.

# தூத்துக்குடி: போலீசார் தலைமையில் மாணவர்கள் போதைபொருள் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி

தூத்துக்குடி, மே.30

தமிழ்நாடு முதல் அமைச்சரின் "போதையில்லா தமிழகம்" என்ற விழிப்புணர்வு பிரசாரத்தின் அடிப்படையில் அதனை பரப்பும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து உட்கோட்ட எல்லைக்குட்பட்ட பள்ளிகள் மற்றும் பொது இடங்கள் என மொத்தம் 21 இடங்களில் உள்ளகாவல்துறை பாய்ஸ் அண்ட் கேர்ள்ஸ் கிளப்ன் மாணவ மாணவிகளுக்கு கைப்பந்துவிளையாட்டில் நன்கு பயிற்சி பெற்ற காவல்துறையினர் மூலம் கைப்பந்து விளையாட்டு பயிற்சி கற்றுக் கொடுக்க



ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி முதற்கட்டமாக நேற்று (28.5.2025) மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் உத்தரவின்படி, தூத்துக்குடி தாளமுத்துநகர், பெரியசெல்வம்நகர் மற்றும் பிரையண்ட்நகர் காவலர் குடியிருப்பு ஆகியபகுதிகளில்வைத்து போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பாய்ஸ் அண்ட் கேர்ள்ஸ் கிளப்ன் மாவண மாணவிகளுக்கு காவல்துறையினர் மூலம் கைப்பந்து விளையாட்டு பயிற்சி அளிக்க பட்டது.

இந்த விளையாட்டு பயிற்சியின் தொடக்க நிகழ்வாக மாணவ மாணவிகள் மற்றும் பயிற்சியளிக்கும் காவல்துறையினர், தாளமுத்துநகர்காவல் நிலைய இன்ஸ்பெக்டர் அருளப்பன், தென்பாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் திருமுருகன் ஆகியோர் போதைபொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்து பின்னர் விளையாட்டு பயிற்சி துவங்கப்பட்டது.

# ஆர்.பி.ஐ. விதிகளால் கூட்டுறவு வங்கிகளுக்கு பெரிய பாதிப்பு இருக்காது அமைச்சர் பெரிய கருப்பன்

சென்னை மே.30

தீவுத்திடல் சத்தியவாணி முத்து நகரில் அமையவுள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாக இடத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் இன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் பெரிய கருப்பன் கூறியதாவது:



நகைக்கடன் குறித்த ரிசர்வ் வங்கி விதிகள் தொடக்க வேளாண் வங்கிகளுக்கு பொருந்தாது. ரிசர்வ் வங்கிவிதிகளால் கூட்டுறவு வங்கிகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.60 ஆயிரம் கோடி நகை கடன் தரப்பட்டுள்ளது. நியாய விலை கடைகளில் ஆள் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# திருவாரூர்: அரசுப் பேருந்தில் ரூ.20 லட்சம் ஹவாலா பணம் எடுத்துச்சென்ற நபர் கைது



திருவாரூர் மே.30

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அருகே அரசுப் பேருந்தில் ரூ.20 லட்சம் ஹவாலா பணத்தை எடுத்துச்சென்ற நபரை போலீசார் கைது செய்தனர். பேரளம் காவல் ஆய்வாளர் சுகுணா தலைமையிலான போலீசார் நேற்று நள்ளிரவில் கீரனூர் சோதனை சாவடியில் காரைக்கால் மற்றும் பாண்டிச்சேரி பகுதியில் இருந்து மதுபாட்டில்கள் கடத்தி வரப்படுகிறதா என்று ஒவ்வொரு பேருந்திலும் சோதனை மேற்கொண்டனர்.

அந்த வகையில் திருவாரூரில் இருந்து மயிலாடுதுறை நோக்கி சென்ற அரசு பேருந்தை மறித்து சோதனை செய்தனர். அப்போது அந்த பேருந்தில் இருந்த நபர் ஒருவரின் பையில் ரூ.20 லட்சம் ஹவாலா பணம் இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து அவரை கைது செய்த போலீசார் ரூ.20 லட்சம்பணத்தை பறிமுதல் செய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், அவர் மயிலாடுதுறை மாவட்டம் பந்தநல்லூர் பகுதியைச் சேர்ந்த முகமது யூனிஸ் (40 வயது) என்றும், திருவாரூரில் உள்ள ஒரு நபரிடம் இருந்து ரூ.20 லட்சம் ஹவாலா பணத்தை வாங்கிக் கொண்டு மயிலாடுதுறை சென்றதும் தெரிய வந்துள்ளது. மேலும் இது தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேமுதிகவுக்கு சீட் தருவது அதிமுகவின் கடமை பிரேமலதா விஜயகாந்த் பேட்டி



புதுக்கோட்டை, மே.30

புதுக்கோட்டையில் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது: தேமுதிகவிற்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவியை வழங்குவது அதிமுகவின் கடமை. இது ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது தான். பொறுத்தவர் பூமி ஆள்வார்கள். நாங்கள் பதற்றமின்றி தெளிவாக உள்ளோம். மாநிலங்களவை சீட் கொடுக்கவில்லையென்றால் பின்னர் பார்த்துக்கொள்ளலாம். தேர்தலுக்கு கால அவகாசம் உள்ளது. வரும் ஜனவரிக்குள் எல்லாம் முடிவு செய்யப்படும். ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பது வரவேற்கத்தக்க ஒன்றுதான். வரும் காலங்களில் நிச்சயம் ஆட்சியில் பங்கு என்ற நிலை உருவாகும் என்றார். ஆட்சி அதிகாரத்தில் பக்கு என்று தவெக தலைவர் விஜய் ஏற்கெனவே கூறிய நிலையில் பிரேமலதா வரவேற்பு தெரிவித்துள்ளார்.

# பாமக இளைஞர் சங்க தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாக முகுந்தன் அறிவிப்பு



சென்னை, மே.30

பாமக இளைஞர் சங்க தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாக முகுந்தன் அறிவித்துள்ளார். ராமதாஸ் குலதெய்வம் என்றும் அன்புமணி எதிர்காலம் எனவும் தனது கடிதத்தில் கூறியுள்ளார். பாமக பொறுப்பில் இருந்து விலகும் கடிதத்தை அன்புமணிக்கு முகுந்தன் அனுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாட்டாளி இளைஞர் சங்கத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுதல் தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞரணியான பாட்டாளி இளைஞர் சங்கத்தின் தலைவராக கடந்த 28.12.2024 ஆம் நாளில் நான் நியமிக்கப்பட்டேன்.

சொந்த காரணங்களுக்காக அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன். ராமதாஸ் தான் என்றென்றும் எனது குலதெய்வம், அன்புமணி ராமதாஸ் ஆகிய தாங்கள் தான் எங்கள் எதிர்காலம் என்ற உணர்வுடன் தொடர்ந்து கட்சிப் பணியாற்றுவேன் என்று உறுதியளிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# கனமழை.. நிலச்சரிவு அபாயம்: ஊட்டியில் சுற்றுலா தலங்கள் மூடல்

நீலகிரி, மே.30

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து கனமழை பெய்துவரும்நிலையில், இன்று (வியாழக்கிழமை), நாளை (வெள்ளிக்கிழமை) என மேலும் 2 நாட்கள் அதிகனமழைக்கான "ரெட் அலர்ட்" விடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா உள்பட ஊட்டியில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களும் 2 நாட்கள் மூடப்படுகிறது.

ஊட்டிகூடலூர் தேசிய நெடுஞ்சாலையில் தவளைமலை பகுதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும் ராட்சத பாறைகள் மரங்களின் இடுக்கில் சிக்கி உள்ளன. அவை எந்நேரமும் கீழே விழுந்து நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த சாலையில் கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. அரசு பஸ்கள் மட்டும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை செல்லலாம். அதேபோல் அந்த சாலையில் சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் வர தடை விதிக்கப்படுகிறது. இரவு நேரங்களில் அனைத்து வாகனங்களும் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் ஆம்புலன்ஸ் உள்பட அத்தியாவசிய வாகனங்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இந்நிலையில் எந்த நேரத்திலும் நிலச்சரிவு ஏற்படலாம் என்ற அபாயத்தில் உள்ள ஊட்டி கூடலூர்சாலையில் போக்குவரத்தை முழுமையாகநிறுத்தி, ஆய்வு பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# சென்னை: திருமண விழாவில் நடனமாடிய வாலிபர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

சென்னை மே.30

சென்னை புதுவண்ணாரப்பேட்டை அசோக் நகர் 4வது தெருவைச் சேர்ந்தவர் சுபாஷ் சந்திரபோஸ் (27 வயது). விசுவல் கம்யூனிகேஷன் படித்துள்ளார். இன்னும் திருமணம் ஆகாத இவர், மின்வாரியத்தில் ஒப்பந்ததாரராக உள்ள தனது தந்தை தமிழரசனுக்கு உடந்தையாக வேலை செய்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சுபாஷ், தண்டையார்பேட்டையில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்ற தனது நண்பரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அங்கு நடந்த டி.ஜே. நிகழ்ச்சியில் தனது நண்பர்களுடன் சேர்ந்து சுபாஷ் பாடல்களுக்கு ஏற்ப உற்சாகமாக நடனமாடினார்.

அப்போது அவர் திடீரென மயங்கி விழுந்தார். இதனால் அவரது நண்பர்கள் மற்றும் மணமக்களின் உறவினர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக சுபாஷ் சந்திரபோசை மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், சுபாஷ் சந்திரபோஸ் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். அதை கேட்டு அவரது நண்பர்கள் கதறி அழுதனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த புது வண்ணாரப்பேட்டை போலீசார் இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 11 நகராட்சிகளின் தரத்தை உயர்த்தியது தமிழ்நாடு அரசு

சென்னை, மே.30

11 நகராட்சிகளின் தரத்தை உயர்த்தி தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி திருச்செங்கோடு, உடுமலைப்பேட்டை, பழனி சிறப்புநிலை நகராட்சிகளாகவும், நந்திவரம்கூடுவாஞ்சேரி, ராமேஸ்வரம் பல்லடம் தேர்வுநிலை நகராட்சிகளாவும், மாங்காடு, குன்றத்தூர், வெள்ளக்கோவில், அரியலூர், அம்பாசமுத்திரம் ஆகியவை முதல்நிலை நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் தா.கார்த்திகேயன் வெளியிட்ட உத்தரவில், "சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்த அதன் ஆண்டு வருவாய் ரூ.15 கோடிக்கு மேலாகவும், தேர்வு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த ரூ.15 கோடி வரையிலும், முதல்நிலை நகராட்சியாக நிலை உயர்த்த ரூ. 9 கோடிவரையிலும், இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த ரூ.6 கோடிக்கு மிகாமலும் வருவாய் அளவு இருக்க வேண்டும்.



இந்நிலையில், திருச்செங்கோடு, உடுமலைப்பேட்டை, பழனி, நந்திவரம் கூடுவாஞ்சேரி, பல்லடம், ராமேசுவரம், மாங்காடு, குன்றத்தூர், வெள்ளக்கோவில், அரியலூர், அம்பாசமுத்திரம் ஆகிய நகராட்சிகளைத் தரம் உயர்த்த தமிழக அரசு முடிவு செய்தது.

சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி இந்த முடிவை அரசு எடுத்துள்ளது. மாநில அரசு நிர்ணயித்துள்ள வருவாய் அளவுக்கு உட்பட்டு அந்த நகராட்சிகள் இருப்பதால் அவை தரம் உயர்த்தப்படுகின்றன.

திருச்செங்கோடு, உடுமலைப்பேட்டை, பழனி ஆகிய மூன்று தேர்வு நிலை நகராட்சிகள் சிறப்பு நிலை நகராட்சிகளாகவும், நந்திவரம் கூடுவாஞ்சேரி, பல்லடம், ராமேசுவரம் ஆகிய முதல்நிலை நகராட்சிகள் தேர்வு நிலை நகராட்சிகளாகவும், மாங்காடு, குன்றத்தூர், வெள்ளக்கோவில், அரியலூர், அம்பாசமுத்திரம் ஆகிய இரண்டாம் நிலை நகராட்சிகள் முதல்நிலை நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்படுகின்றன.

இதற்கான பரிந்துரைகளை அரசுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அளித்துள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடையநல்லூர் அருகே மின்சாரம் தாக்கி வாலிபர் உயிரிழப்பு

தென்காசி, மே.30

கடையநல்லூர் அருகே அச்சன்புதூர் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்தவர் சித்திக். இவர் அப்பகுதியில் கேபிள் ஆபரேட்டராக உள்ளார். இவரது மகன் முகம்மது பாசில் (24), படித்து முடித்துவிட்டு தந்தைக்கு உதவியாக இருந்தார்.

அச்சன்புதூர் பகுதியில் கடந்த 4 நாட்களாக பலத்த காற்றும் மழையும் பெய்ததால் வீடுகளில் சரிவர கேபிள் டி.வி. தெரியவில்லை.

எனவே அங்குள்ள தெருவில் கேபிள் டி.வி. ஒயரை சரி செய்வதற்காக முகம்மது பாசில் இழுத்தார். அப்போது கேபிள் ஒயர் வழியாக அவர் மீது மின்சாரம் பாய்ந்தது.

இதில் தூக்கி வீசப்பட்ட முகம்மது பாசிலை அருகில் உள்ளவர்கள் மீட்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே முகம்மது பாசில் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து அச்சன்புதூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நீலகிரி சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கு; குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை கோர்ட்டு உத்தரவு

நீலகிரி, மே.30

நீலகிரி மாவட்டம் உதகை உட்கோட்டம் உதகை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 21.06.2020 முதல் உதகை கையாசம் பிள்ளை வீதியை சேர்ந்த 18 வயது சிறுமி தன்னை, தாமஸ் சர்ச் சாலையை சேர்ந்த பிரமோக்குட்டன் என்பவர் காதலித்து பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் அளித்தார்.

இந்த புகாரின் பேரில் விசாரணை நடத்திய நீலகிரி போலீசார், பிரமோக் குட்டன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். பின்னர் அவரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். அவரை நீதிமன்ற காவலில்வைக்க கோர்ட்டு உத்தரவிட்டது.




இந்த வழக்கில் புலன் விசாரணை முடித்து உதகை மகிளா நீதிமன்றத்தில் உதகை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் நித்தியா குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார். இந்த வழக்கில் நீதிமன்றம் விசாரணை முடித்து குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையும் 10,000/ ரூபாய் அபராதமும் விதித்து நீதிபதி செந்திக்குமார் தீர்ப்பளித்தார்.

# சென்னையில் வார்டு வாரியாக சிறப்பு குழந்தைகள் குறித்து கணக்கெடுப்பு மேயர் பிரியா தகவல்

சென்னை, மே.30

சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட அலுவலக கூட்டரங்கில் மே மாதத் திற்கான மாமன்ற மன்றக் கூட்டம் மேயர் பிரியா தலைமையில் நடந்தது. அப்போது, 72வது வார்டு தி.மு.க. கவுன்சிலர் சரவணன் பேசியதாவது: "என்னுடைய வார்டில் மட்டும் 100 சிறப்பு குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களை பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்களுக்கு சிரமம் உள்ளது. எனவே, சிறப்பு குழந்தைகளுக்கான வகுப்பறைகளை ஏற்படுத்தித் தர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.



இதற்கு பதிலளித்த மேயர்பிரியா, "சிறப்பு குழந்தைகள் குறித்து வார்டு வாரியாக கணக்கெடுக்கப்படும். அதன்பின்னர், அவர்களுக்கான சிறப்பு வகுப்பறைகளை ஏற்படுத்துவது குறித்து முடிவு செய்யப்படும்" என்று தெரிவித்தார்.

# ஆசிய தடகள சாம்பியன்ஷிப்: பதக்கம் வென்ற தமிழக வீரர்களுக்கு டிடிவி தினகரன் வாழ்த்து

சென்னை, மே.30

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், தென்கொரியாவில் நடைபெற்று வரும் 26வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தொடரில் மும்முறை தாண்டுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கும் பிரவின் சித்ரவேல் அவர்களுக்கும், 20 கிலோ மீட்டர் நடையோட்டம் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றிருக்கும் செர்வின் சபாஸ்டியன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். உலகளவில் நடைபெறும் தடகள சாம்பியன்ஷிப் தொடரில்




பதக்கங்களை குவித்து ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் பெருமை தேடித் தந்திருக்கும் தமிழக வீரர்களின் வெற்றிப் பயணம் இன்மேலும் தொடர மீண்டும் ஒருமுறை வாழ்த்தி மகிழ்கிறேன். என தெரிவித்துள்ளார்.

# மத்திய, மாநில அரசுகள் இணைந்து குவிண்டாலுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும்: ராமதாஸ் கோரிக்கை

சென்னை, மே.30

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

2024, 25ஆம் ஆண்டில் சாதாரண வகை நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.2369 ஆகவும் சன்னரக நெல்லுக்கான ஆதரவு விலையை ரூ.2389 ஆகவும் உயர்த்தி மத்திய அரசு அறிவித்திருக்கிறது. 202425ஆம் ஆண்டில் இந்த நெல் வகைகளுக்கு முறையே ரூ.2300, ரூ. 2320 கொள்முதல் விலையாக அறிவிக்கப்பட்ட நிலையில், நடப்பாண்டில் குவிண்டாலுக்கு வெறும் ரூ.69, அதாவது 3% மட்டும் உயர்த்துவது போதுமானது அல்ல.

ஒரு குவிண்டால் நெல்லுக்கான உற்பத்திச்செலவு ரூ.1579 என்பதை அடிப்படையாக வைத்து, அதனுடன் 50% லாபம் சேர்த்து இந்த விலையை மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. உற்பத்திச் செலவை கணக்கிடுவதற்காக மத்திய அரசு கடைபிடிக்கும் நடைமுறை தவறு என்பது தான் அனைத்து குழப்பங்களுக்கும் காரணம் ஆகும். தமிழ்நாட்டில் ஒரு குவிண்டால் நெல்லை உற்பத்தி செய்ய ரூ.2300 செலவாவதாக உழவர்கள் தரப்பில் கூறப்படும் நிலையில், அதே அளவுக்கு கொள்முதல் விலையும் நிர்ணயிக்கப்பட்டால் உழவர்களுக்கு லாபமே கிடைக்காது. வட்டிக்கு கடன் வாங்கி



வேளாண்மை செய்யும் உழவர்கள், போதிய லாபம் கிடைக்காவிட்டால் மீள முடியாத கடன் சுமையில் சிக்கிக் கொள்வார்கள்.

நெல்லுக்கான கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் போது உழவர்கள் நலனை மத்திய அரசு கருத்தில் கொள்வதில்லை என்பதைப் போலவே, கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை நிர்ணயிப்பதில் தமிழக அரசும் துரோகம் செய்கிறது. கடந்த ஆண்டில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு சாதாரணவகைக்குரூ.105, சன்ன வகைக்கு ரூ.120 மட்டுமே ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது. இதைக் கொண்டு உழவர்களின் துயரத்தைத் துடைக்க முடியாது.

பாரதிய ஜனதா ஆட்சி நடக்கும் ஒடிசாவில் குவிண்டாலுக்கு ரூ.800 வீதமும், காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் தெலுங்கானாவில் குவிண்டாலுக்கு ரூ.500 வீதமும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

இதேபோல், தமிழக அரசும் குவிண்டாலுக்கு குறைந்தது ரூ.800 முதல் ரூ.1000 வரை ஊக்கத் தொகை வழங்க வேண்டும். அதேபோல், மத்திய அரசிடமும் பேச்சு நடத்தி, ஒரு குவிண்டாலுக்கு ரூ.3,500 வீதம் கொள்முதல் விலை வழங்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். என தெரிவித்துள்ளார்.


# அண்ணா பல்கலை.பாலியல் வழக்கு தீர்ப்பு தி.மு.க. எம்.பி. கனிமொழி வரவேற்பு

சென்னை, மே.30

தி.மு.க. எம்பி கனிமொழி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் கைதான ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 12 குற்றச்சாட்டுகளில், 11 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகி உள்ளதாக சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஜூன் 2ம் தேதி தண்டனை விவரங்களை அளிப்பதாக நீதிபதி அறிவித்திருக்கிறார்.

கடந்த டிசம்பரில் நடந்த நிகழ்வில் மிகத் துரிதமாகக் குற்றவாளியைக் கண்டுபிடித்து, குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, விசாரணையை முடித்து, குற்றவாளிக்குத் தண்டனையையும் கொடுத்திருக்கிறது தமிழகக் காவல் துறை. அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த டிசம்பர் 23ம் தேதி பல்கலைக்கழக மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை அதே செய்யப்பட்டார். உடனே குற்றவாளி ஞானசேகரனை போலீஸ் கைது செய்தது.3 பெண் ஐ.பி.எஸ் அதிகாரிகள் கொண்ட சிறப்புக் குழு, வழக்கை விசாரித்தது. பாலியல் வழக்கு மட்டுமல்லாது, ஏற்கனவே ஞானசேகரன் மீதான திருட்டு, ஆள் கடத்தல், வீடு புகுந்து கொள்ளையடித்தல் உள்ளிட்ட பல வழக்குகளையும் காவல் துறை விசாரித்தது. மார்ச் மாதம் முதல் விசாரணை தொடங்கியது. தினந்தோறும் என்ற அடிப்படையில் ஏப்ரல் 23ம் தேதி முதல்சாட்சிகள்விசாரணை நடைபெற்றது. பாதிக்கப்பட்ட மாணவி உள்பட 29 பேர் சாட்சியம் அளித்தனர். 75 சான்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. சம்பவம் நடந்த நாளிலிருந்து சரியாக 157ஆவது நாளில் குற்றவாளியின் தண்டனையை உறுதி செய்திருக்கிறது தமிழகக் காவல் துறை. இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தில், சி.பி.ஐ விசாரணையை கேட்டபோது, 'சிபிஐ விசாரணை தேவையில்லை' என டி.ஜி.பி அறிக்கை தாக்கல் செய்தார். சிபிஐ கூட இவ்வளவு துரிதமாக விசாரித்திருக்க முடியுமா? எனக் கேட்கும் அளவுக்கு இந்த வழக்கைத் தமிழகக் காவல் துறை மிகச் சிறப்பாக நடத்தி குற்றவாளியின் குற்றத்தை நிரூபித்திருக்கிறது. இந்த வழக்கு தொடர்பாகக் கடந்த ஜனவரி 8ம் தேதி சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, இந்த வழக்கின்



குற்றவாளி மீது தயவுதாட்சண்யம் இல்லாமல் காவல் துறை நடவடிக்கை எடுக்கும். இந்த வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். விரைவு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிக்கு உச்சபட்சத் தண்டனை கிடைக்கும்' என்று சொன்னார். அதனைச் செய்து காட்டியிருக்கிறார். அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் தீர்ப்பு வெளியாவதற்கு 15 நாட்களுக்கு முன்புதான், பொள்ளாச்சி பாலியல் வழக்கில் 9 பேருக்குச் சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த வழக்கோடு அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கையும் கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள். எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த பொள்ளாச்சி பாலியல் வழக்கு நாட்டையே உலுக்கியது. பொள்ளாச்சி பாலியல் குற்றச் சம்பவம் கடந்த 2016ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை நடைபெற்றாலும், 2019ம் ஆண்டுதான் வெளிச்சத்துக்கு வந்தது. அன்றைக்குத் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் பொள்ளாச்சி பாலியல் வழக்கை வெளிக் கொணராமல் போயிருந்தால் அன்றைய எடப்பாடி பழனிசாமி அரசு விவகாரத்தை மூடி மறைத்திருக்கும். அதிமுகவினர் சம்பந்தப்பட்டிருந்ததால் வழக்கைப் பதியாமல் இழுத்தடித்ததோடு பாதிக்கப்பட்ட மாணவியின் அண்ணனையே தாக்க முயன்றார்கள். ஆறரை ஆண்டுகள் பொள்ளாச்சி பாலியல் வழக்கு நடைபெற்றது. இத்தனைக்கும் அந்த வழக்கை விசாரித்தது சிபிஐ. ஆனால், அண்ணா பல்கலைக்கழக வழக்கை விசாரித்தது தமிழகக் காவல் துறை. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் நியாயம் கிடைக்க ஆறரை ஆண்டு ஆனது. அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாளில் தீர்ப்பு பெற்றுக் கொடுத்திருக்கிறோம். 2019 முதல் 2021 மே வரையிலும் எடப்பாடி பழனிசாமிதான் ஆட்சியில் இருந்தார். பொள்ளாச்சி பாலியல் வழக்கும் அவர் நடத்திய லட்சணத்தை இந்த நாடறியும் இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழில் இருந்துதான் கன்னடம் தோன்றியது எனும் கருத்தில் மன்னிப்புக்கு இடம் இல்லை: கமல்ஹாசன்

சென்னை , மே.30

மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்துள்ள 'தக் லைப்' திரைப்படம் வரும் ஜூன் 5ந்தேதி வெளியாக உள்ளது. இந்த படத்தின் புரமோஷன் பணிகளில் படக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கன்னட நடிகர் சிவராஜ்குமார் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய நடிகர் கமல்ஹாசன், "உயிரின் உறவே தமிழே! எனது வாழ்க்கையும், குடும்பமும் தமிழ் மொழிதான். எனது குடும்பம் இங்கு இருக்கிறது. அதனால்தான் சிவராஜ்குமார் இங்கு வந்துள்ளார். அவரது மொழி(கன்னடம்) தமிழ் மொழியில் இருந்து பிறந்தது. அவரும் நமது குடும்பத்தில் ஒரு அங்கமாவார்"



லையில், கமல்ஹாசனின் பேச்சுக்கு கர்நாடகத்தில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த நிலையில், தமிழில் இருந்துதான் கன்னடம் தோன்றியது எனும் கருத்தில் மன்னிப்புக்கு இடம் இல்லை என கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது ,

அன்பு எப்போதும் மன்னிப்பு கேட்காது. இது பதில் அல்ல, விளக்கம். வரலாற்று ஆய்வாளர்கள், மொழியியலாளர்கள், தொல்லியர் நிபுணர்களிடம் இதனை விட்டுவிடுவோம் . நான் கூறியதற்கு இன்னொரு கோணமும் இருக்கலாம்.

# அன்னை தமிழ் தான் அகில உலகின் மூத்த மொழி அன்புமணி ராமதாஸ்



சென்னை, மே.30

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது: தமிழிலிருந்து பிறந்தது தான் கன்னடம் என்று நடிகர் கமலஹாசன் கூறியதை அடிப்படையாக வைத்து கர்நாடகத்தில் அவருக்குஎதிராகபோராட்டங்கள் வெடித்திருக்கின்றன. நடிகர் கமலஹாசனுக்குகர்நாடகமுதல்மந்திரி சித்தராமையாவும் கண்டனம் தெரிவித்திருக்கிறார். தமிழ் மொழியின் முதுமையை உலகமே ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில், அது குறித்த தேவையற்ற சர்ச்சைகளை ஏற்படுத்துவது கண்டிக்கத்தக்கதாகும்.

உலகின் மூத்த மொழிகளாக அறியப்படுபவை லத்தீன், கிரீன், ஹீப்ரு, சமஸ்கிருதம், அரபி, மாண்டரின் உள்ளிட்டவை தான், இந்த மொழிகள் அனைத்தையும் விட மூத்த மொழி அன்னை தமிழ்தான். தமிழில் இருந்து தான் பிற திராவிட மொழிகள் பிறந்தன என்பது மொழி ஆராய்ச்சியாளர்களால்நிரூபிக்கப்பட்ட உண்மை. தாயை விட மகள் மூத்தவராக இருக்க முடியாது. இதன் மீது எவரும் வினா தொடுக்க முடியாது. கன்னட மொழிக்கென்று பல சிறப்புகள் இருப்பதை மறுக்க முடியாது. 2004ஆம் ஆண்டில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட நிலையில், கன்னடமும், தெலுங்கும் 2008ஆம் ஆண்டில் செம்மொழியாக அறிவிக்கப்பட்டன. எனவே, அனைத்து மொழிகளும் அவற்றின் பழமை, இலக்கியச் செழுமைக்காக போற்றப்பட வேண்டும். அதை விடுத்து மொழிகளை அடிப்படையாகக் கொண்ட சர்ச்சைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பாபநாசம் பகுதியில் மக்களை தொந்தரவு செய்த 33 குரங்குகள் கூண்டு வைத்து பிடிப்பு



நெல்லை, மே.30

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் வனக்கோட்டம், பாபநாசம் வனச்சரகத்திற்கு உட்பட்ட சுந்தராபுரம் தெரு வி.கே.புரம், வேம்பையாபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் குரங்குகள் கூட்டமாக சென்று அட்டகாசம் செய்து வந்தன.

இந்த குரங்குகளின் அட்டகாசத்தை தாங்க முடியாமல் பொது மக்கள் வனத்துறையினரிடம் குரங்குகளை பிடிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில், வனத்துறையினர் அப்பகுதிகளில் குரங்குகளை பிடிக்க பொறி வைத்தனர்.

இந்தநிலையில் 33 குரங்குகள் பாபநாசம் வனச்சரக வனப்பணியாளர்கள் மூலம் கூண்டு வைத்து பிடிக்கப்பட்டது. இதனையடுத்து மீண்டும் மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் வராதவாறு அடர்ந்த வனப்பகுதிக்குள் நல்ல முறையில் திரும்ப விடப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தூத்துக்குடி: போதையில்லா தமிழகம் விழிப்புணர்வு கைப்பந்து போட்டி எஸ்.பி. பரிசு கோப்பை வழங்கல்



தூத்துக்குடி மே.30

தமிழ்நாடு முதலமைச்சரின் "போதையில்லா தமிழகம்" என்ற விழிப்புணர்வு பிரசாரத்தின் அடிப்படையில் அதனை பரப்பும் வகையில் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக மாவட்டம் முழுவதும் அனைத்து கிராம பகுதிகளிலும் பொதுமக்களுக்கு இடையே விழிப்புணர்வு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி முதற்கட்டமாக நேற்று (27.5.2025) மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில் தூத்துக்குடி தாளமுத்துநகர் டி.சவேரியார்புரம் பகுதியில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பொதுமக்கள் அணியினரான CVC அணி, St.சேவியர்ஸ் A, St.சேவியர்ஸ் B, North கோஸ்டல், SDAT ஆகிய 6 அணியினர் கலந்து கொண்டு விழிப்புணர்வு கைப்பந்து விளையாட்டு போட்டி நடைபெற்றது.

இந்த விளையாட்டு போட்டியின் தொடக்க நிகழ்வாக அனைத்து அணி விளையாட்டு வீரர்கள் மற்றும் மாவட்ட எஸ்.பி., தூத்துக்குடி நகர உட்கோட்ட ஏ.எஸ்.பி. மதன் உட்பட காவல்துறையினர், பொதுமக்கள் ஆகியோர் போதைபொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். அதனைத்தொடர்ந்து விளையாட்டு போட்டியை மாவட்ட எஸ்.பி. துவக்கி வைத்தார்.

பின்னர் இந்நிகழ்ச்சியின் நிறைவாக மாவட்ட எஸ்.பி. போதை பொருட்களால் ஏற்படும் அபாயம் குறித்தும், இளைஞர்கள் போதை பொருட்களை தவிர்த்து தங்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் சிறந்தவர்களாக திகழ வேண்டும் என்றும் போதைப்பொருள் தடுப்பு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் அவர் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்று முதல் இடத்தை பிடித்த CVC அணிக்கு பரிசு கோப்பை வழங்கி பாராட்டினர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
30.5.2025

# இன்னும் 10 மாதங்களில் தி.மு.க. அரசை வீட்டுக்கு அனுப்பி வைப்பது உறுதி: விஜய்



சென்னை, மே.30

தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

அண்ணா பல்கலைக்கழக மாணவியைப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் தி.மு.க. நிர்வாகியான ஞானசேகரன் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதைத் தமிழக வெற்றிக் கழகம் வரவேற்கிறது.

இவ்வழக்கில் தமிழ்நாடு அரசின் நிர்வாகத் தோல்வியை மறைப்பதற்காகத் தி.மு.க.வினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். இது தொடர்பாக நான் தமிழ்நாடு ஆளுநரைச் சந்தித்து, பாதிக்கப்பட்ட மாணவிக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என்றும், குற்றவாளிக்கு உரிய தண்டனை கிடைக்க வேண்டும் என்றும் கோரிக்கை மனுவை வழங்கினேன்.

பல்வேறு அரசியல் கட்சிகளின் போராட்டங்களைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து இந்த வழக்கை விசாரணை நடத்தியது. அப்போது, தமிழக முதல்அமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயல்படும் காவல் துறையின் தவறால் முதல் தகவல் அறிக்கை வெளியாகி, பாதிக்கப்பட்ட மாணவி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியதற்காக, அவருக்கு இடைக்கால இழப்பீடாக ரூ.25 லட்சத்தைத் தமிழக அரசு வழங்க வேண்டும் என்றும், அலட்சியமாகச் செயல்பட்ட காவல் துறை அதிகாரிகளிடம் இருந்தே இந்தத் தொகையை வசூலித்துக் கொள்ளலாம் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது என்பதை மக்கள் மறக்கவில்லை.

தொடர்ந்து இவ்வழக்கைத் துரிதமாக விசாரிக்க, டிசம்பர் 28ஆம் தேதி சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன் பிறகே ஜனவரி 5ஆம் தேதி ஞானசேகரன் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டார். பின்னர் பிப்ரவரி 24ஆம் தேதி ஞானசேகரனுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு மகளிர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது.

சென்னை, உயர்நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் விசாரணை நடைபெற்றதால் மட்டுமே இந்த வழக்கு விரைவாக நடத்தப்பட்டு, தற்போது தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்காகச் சென்னை உயர்நீதிமன்றத்திற்குத் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வழக்கில் குற்றவாளி என்று மகளிர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ஞானசேகரனுக்கு உச்சபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், இந்த வழக்கு தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மு.க.ஸ்டாலின் அவர்களின் நிர்வாகத் தோல்வியின் காரணமாகச் சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து இவ்வழக்கை துரிதப்படுத்தியதால் தான், 5 மாதங்களில் தீர்ப்பு வந்துள்ளது. ஆனால் இவற்றையெல்லாம் மறைத்து, தற்போது தீர்ப்பு வழங்கப்பட்டதற்குத் தமிழ்நாடு காவல் துறை தான் காரணம் என்று மனசாட்சியின்றிப் பச்சைப் பொய்யை தி.மு.க. தலைவர் கூறி சுயதம்பட்டம் அடித்துக்கொள்கிறார் என்பதை அனைவரும் அறிவர்.

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியாமல், பெண்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கத் தவறிய, செயல் திறன் அற்ற அவல ஆட்சி இது. இந்தக் கொடுமைகளுக்காகத் தமிழக மக்கள் இன்னும் 10 மாதங்களில் தி.மு.க. அரசை வீட்டுக்கு அனுப்பி வைப்பது உறுதி என்பதை நீதியின் பக்கம் நின்று, நெஞ்சுறுதி மிக்க மகளிர் பக்கம் நின்று தெரிவித்துக்கொள்கிறேன். என தெரிவித்துள்ளார் .

# நீர் மோர் பந்தல் திறப்பு விழா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பா.ப.மோகன் ரிப்பன் வெட்டி திறப்பு



ஈரோடு கிருஷ்ணம்பாளையம் காலனி நண்பர்கள் மற்றும் சொந்தங்கள் சார்பாக கிருஷ்ணன்பாளையம் பகுதியில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டது. அதில் சிறப்பு விருந்தினராக மூத்த வழக்கறிஞர் தோழர் திரு பா.ப மோகன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொது மக்களுக்கு லெமன் ஜூஸ், மோர் மற்றும் மூலிகை, கனிமரக்கன்றுகள் வழங்கினார்கள். இதில் ஊர்ப் பெரியோர்கள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# முத்துக்குமாரபுரம் துர்க்கை அம்மன் கோவில் கும்பாபிஷேகம்



தூத்துக்குடி மே.30

விளாத்திகுளம் அருகே உள்ள முத்துக்குமாரபுத்தில் உள்ள துர்க்கையம்மன், வரசித்தி விநாயகர் கோவிலில் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. திருப்பணிகள் முடிவடைந்த நிலையில் கும்பாபிஷேகத்திற்கான யாக சாலை பூஜைகள் தொடங்கின.

இன்று காலை இறுதிக்கட்ட யாக சாலை பூஜையின் போது விசேஷ திரவியங்கள், பட்டு வஸ்திரங்கள் ஹோமத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மஹா பூர்ணாஹுதி, யாத்ரா தானம், விசேஷ தீபாராதனை என பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதையடுத்து காலை 9 மணியளவில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனித நீரை வரசித்தி விநாயகர் கோவில் மற்றும் துர்க்கை அம்மன் கோவில் விமான கலசங்களுக்கு ஊற்றி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர், விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து துர்க்கை அம்மனுக்கு மஞ்சள், சந்தனம், பால், திருநீறு, இளநீர், தயிர், என பல வகையான பொருட்களால் அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது.

# திருநெல்வேலி: குளத்தங்கரையில் மரம் வெட்டி திருட முயற்சி வாலிபர் கைது

திருநெல்வேலி, மே.30

திருநெல்வேலி மாவட்டம், முன்னீர்பள்ளம் பகுதியான, கோபாலசமுத்திரம், நம்பினேரி குளத்தங்கரை அருகே நேற்று (27.5.2025) களக்காடு, உப்பூரணியை சேர்ந்த அஜித்குமார் (வயது 26) மற்றும் சிலர் மரங்களை வெட்டி டிராக்டர் மூலம் திருட முயற்சித்துள்ளனர். இது குறித்து சேரன்மகாதேவி, கன்னடியன் கால்வாய் பிரிவு, உதவி பொறியாளர் ராஜேஸ்வரி, முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார். அதில் களக்காடு, உப்பூரணியை சேர்ந்த அஜித்குமார் மரக்கட்டைகளை திருட முயற்சிப்பது தெரியவந்தது. இதனையடுத்து அந்த மரக்கட்டைகளை பறிமுதல் செய்து, அஜித்குமாரை சப் இன்ஸ்பெக்டர் நேற்று (27.5.2025) கைது செய்து நீதி மன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

# இன்றைய ராசி பலன்கள் (30.5.2025)

**மேஷம்**
பதவிஉயர்வுமற்றும்பணவரவுஅதிகரிக்கும்.
பணியிடம்: புதிய பொறுப்புகள் கிடைக்கும்.
அதிர்ஷ்டம்: சூரியன் மற்றும் புதன் சேர்க்கை காரணமாக, பதவி உயர்வு உறுதி.

**ரிஷபம்**
நிலைமை: செலவுகள் அதிகரிக்கும், ஆனால் பண வருமானமும் அதிகரிக்கும்.
வியாபாரம்: மாளவ்ய ராஜயோகத்தால், வியாபாரத்தில் முன்னேற்றம்.

**மிதுனம்**
அதிர்ஷ்டம்: சிறிய வியாபாரம் தொடங்க வாய்ப்பு, காதல் வளர்ச்சி காணலாம்.
வேலை: புதியவாய்ப்புகள்கிடைக்கும்.

**கடகம்**
நிலைமை: கலவையான பலன்கள்; சில சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.
உறவுகள்: உறவுகளில் பேச்சு முரண்பாடுகள் ஏற்படும்

**சிம்மம்**
நிலைமை: பிஸியான நாள்; பயணங்களில் தாமதம் மற்றும் கடன் தேவையை எதிர்நோக்கவேண்டும்.
பணியிடம்: தன்னம்பிக்கை, புகழ் மற்றும் பொருளாதார முன்னேற்றம் கிடைக்கும்.

**கன்னி**
நிலைமை: வியாபாரத்தில் முன்னேற்றம்; ஆனால் சில அச்சங்கள் இருக்கலாம்.
வேலை: தொழிலில் முன்னேற்றம் அடைவார்கள், வெளியூர் பயணம் வாய்ப்பு உள்ளது.

**துலாம்**
நிலைமை: பண வருமானத்தில் முன்னேற்றம்; ஆனால் கவனமாக செயல்பட வேண்டும்.
வேலை: புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**விருச்சிகம்**
நிலைமை: சிலவர்களுக்கு அச்சம் மற்றும் கவனமாக இருக்க வேண்டிய சூழ்நிலைகள் இருக்கலாம்.
வேலை: புதிய திட்டங்கள் மகத்தான நன்மையை தரும்.

**தனுசு**
நிலைமை: மன அழுத்தம், பயணம், உறவுகளில் பேச்சு முரண்பாடுகள் ஏற்படும்.
வேலை: புதிய வேலை வாய்ப்பு மற்றும் வருமான உயர்வு கிடைக்கலாம்.

**மகரம்**
நிலைமை: பிள்ளைகளின் திருமணம் தொடர்பாக நல்ல செய்தி கிடைக்கும்.
பணம்: செலவுகள் அதிகரிக்கும்; நிதி மேலாண்மை அவசியம்.

**கும்பம்**
நிலைமை: குடும்பத்திலும், பணியிடத்திலும் கருத்து வேறுபாடுகள், வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.
வேலை: சிலரிடம் சேர்ந்து செய்யக்கூடிய தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

**மீனம்**
நிலைமை: ஊக்கம் அளிக்கக்கூடிய நல்ல செய்திகள் கிடைக்கும்.
பணம்: நிதி சார்ந்த விஷயத்தில் கவனம் தேவை; இல்லையெனில் இழப்பு ஏற்படும்.

# தரமணி: இளங்கலை காட்சிக்கலை பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்க கடைசி நாள் ஜூன் 4 வரை நீட்டிப்பு

சென்னை மே.30

சென்னை தரமணி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சென்னை தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர்.திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் 20252026ம் கல்வியாண்டில் இளங்கலை காட்சிக் கலை (*Bachelor of Visual Arts*) எனும் 4 ஆண்டு கால பட்டப்படிப்பிற்கான கீழ்க்கண்ட 6 பிரிவுகளில் மாணவர் சேர்க்கைக்கு இணையத்தளம் வழியாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது.

1.இளங்கலை காட்சிக் கலை (ஒளிப்பதிவு) *Bachelor of Visual Arts (Cinematography)* 2.இளங்கலை காட்சிக்கலை (எண்மிய இடைநிலை) *Bachelor of Visual Arts (Digital Intermediate)* 3.இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு) *Bachelor of Visual Arts (Audiography)*

4.இளங்கலை காட்சிக் கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) *Bachelor of Visual Arts (Direction and Screenplay writing)* 5.இளங்கலை காட்சிக்கலை (படத்தொகுப்பு) *Bachelor of Visual Arts (Film Editing)* 6.இளங்கலை காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் ) *Bachelor of Visual Arts (Animation and Visual Effects)* இளங்கலைக் காட்சிக்கலை பட்டப்படிப்புக்கு இணையதள வழியாக விண்ணப்பங்கள் பெறுவதற்கு கால அவகாசம் 4.6.2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால் கலை ஆர்வம் உள்ள மாணவ/மாணவியர் விருப்பமுள்ள பாடப்பிரிவுகளுக்கு *www.filminstitute.tn.gov.in* எனும் இணையத்தளத்தில், மாணவர் சேர்க்கைக்கான படிவத்தினை பயனாளர் கையேட்டின் (*User Manual*) அறிவுத்தலின் படி பூர்த்தி செய்து, விண்ணப்ப கட்டணம் செலுத்தி பதிவு செய்தும், அனைத்து உரிய ஆவணங்களுடன் 4.6.2025 மாலை 5 மணிக்குள் பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# முதல் முறையாக குத்து பாடலுக்கு நடனமாடும் ராஷ்மிகா



தென்னிந்திய சினிமாவின் முன்னனி நடிகை ராஷ்மிகா மந்தனா. கடந்த 2016ம் ஆண்டு வெளியான "கிரிக் பார்ட்டி" என்றகன்னடதிரைப்படத்தின்மூலம்சினிமாவில்கதாநாயகியாக அறிமுகமானார். அதனைத்தொடர்ந்து, "கீதா கோவிந்தம்", "டியர் காம்ரேட்", "பீஷ்மா" உள்ளிட்டபடங்களில்நடித்துபிரபலமானார்.

இவரது நடிப்பில் சமீபத்தில் 'சிக்கந்தர்' படம் வெளியானது. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சல்மான் கானுடன் இணைந்து நடித்த இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இதையடுத்து பான் இந்தியா அளவில் ராஷ்மிகா மந்தனா பிரபலமாகியுள்ளார்.

இந்த நிலையில், பிரசாந்த் நீல் இயக்கத்தில் ஜூனியர் என்டிஆர் நாயகனாக நடித்து வரும் படம் 'டிராகன்' படத்தில் ஜூனியர் என்டிஆருடன் இணைந்து ஒரு சிறப்பு பாடலுக்கு ராஷ்மிகா மந்தனா நடனமாடப் போவதாக ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது. இதற்காக படக்குழு அவருடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. ராஷ்மிகா மந்தனா இதுவரை எந்த படத்திலும் குத்து பாடலுக்கு நடனமாடியதில்லை என்பதாலும், அவரது பான் இந்தியா புகழ் காரணமாக இந்தப் பாடல் வெற்றி பெறும் என்பதாலும் பிரசாந்த் நீல் அவரை அணுகியதாக கூறப்படுகிறது.

# சசிகுமாரின் டூரிஸ்ட் பேமிலி பட ஓ.டி.டி ரிலீஸ்.. எப்போது தெரியுமா?




அயோத்தி, கருடன், நந்தன்' உள்ளிட்ட வெற்றிப்படங்களை அடுத்து சசிகுமார் தற்போது நடித்துள்ள படம் 'டூரிஸ்ட் பேமலி'. குட் நைட், லவ்வர் படங்களை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் இப்படத்தை தயாரித்துள்ளது. அபிஷன் ஜீவிந்த் இயக்கும் இந்தப் படத்தில் சிம்ரன் கதாநாயகியாக நடித்துள்ளார். யோகி பாபு, எம்.எஸ்.பாஸ்கர், மிதுன் ஜெய்சங்கர், கமலேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். கடந்த மே 1ந் தேதி வெளியான இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இலங்கை தமிழர்களான சசிகுமார் குடும்பம் அங்குள்ள பொருளாதார சூழல் காரணமாக தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக நுழைகின்றனர். அதன்பிறகு அவர்களின் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை நகைச்சுவையுடனும், எமோஷனலுடனும் படம் பதிவு செய்துள்ளது.

இப்படம் வெளியான முதல் நாளில் இருந்தே பாசிட்டிவான விமர்சனங்களை பெற்று நாளுக்கு நாள் வசூலையும் வாரி குவித்து வருகிறது. இந்த படத்திற்காக கூடுதல் திரையரங்குகளும் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில், இப்படம் 4வது வாரத்தில் வெற்றிநடைபோட்டு வருகிறது. குடும்பங்கள் கொண்டாடும் இப்படம் இன்றுவரையிலும் பல திரையரங்குகளில் ஹவுஸ்புல்லாக ஓடிக்கொண்டிருக்கிறது. சசிகுமார் மற்றும் சிம்ரன் நடிப்பில் வெளியான 'டூரிஸ்ட் பேமலி' திரைப்படம் ஜப்பானில் வெளியாகியுள்ளது. இத்திரைப்படம் இதுவரை உலகம் முழுவதும் ரூ.75 கோடி வசூல் செய்துள்ளதாக தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. ரஜினிகாந்த், சிவகார்த்திகேயன், இயக்குநர் ராஜமவுலி, சூர்யா ஆகியோரை தொடர்ந்து நடிகர் நானியும் இந்தப் படத்தைப் பாராட்டியுள்ளார்.

'டூரிஸ்ட் பேமிலி' படம் வரும் ஜூன் 2ம் தேதி ஜியோ ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகிறது.

# கியாரா அத்வானியின் பிகினி புகைப்படத்தை பகிர்ந்து சர்ச்சையில் சிக்கிய ராம் கோபால் வர்மா

இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் ராம்சரண் நடிப்பில் உருவான 'கேம்சேஞ்சர்' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் கியாரா அத்வானி. இந்தி திரை உலகில் முன்னணி கதாநாயகிகளில் ஒருவராக இருக்கும் அவர், அயன்முகர்ஜி இயக்கில் உருவாகி உள்ள 'வார் 2' படத்தில் ஹிருதிக்ரோஷன், ஜூனியர் என்.டி.ஆருடன் இணைந்து நடிக்கிறார். ஜூனியர் என்.டி.ஆர் பிறந்தநாளையொட்டி இந்த படத்தின் டீசர் வெளியானது. அந்த டீசரில் இதுவரை இல்லாத அளவிற்கு கியாரா அத்வானி பிகினி உடையில் கவர்ச்சியாக தோற்றமளித்துள்ளார். டீசரை தனது சமூக வலைதளப்பக்கத்தில் பகிர்ந்த கியாரா அத்வானி, "இப்படத்தின் மூலம் எனக்கு முதன்முறையாக நடந்த பல விஷயங்கள் உண்டு. முதல் அதிரடி படத்தில் நடித்தது, ஹிருத்திக் ரோஷன், ஜூனியர் என்.டி, ஆருடன் முதன் முறையாக நடித்தது, முதல் முறையாக பிகினி உடையில் நடித்தது" என பதிவிட்டுள்ளார். இந்த நிலையில், கியாரா அத்வானியின் பிகினி புகைப்படத்தை இயக்குனர் ராம் கோபால் வர்மா தனது 'எக்ஸ்' வலைதள பக்கத்தில் பகிர்ந்திருந்தார். மேலும் அந்த பதிவில் கியாரா அத்வானி குறித்து ஆபாசமான கருத்தையும் அவர் பதிவிட்டதாக தெரிகிறது. இந்த பதிவு சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், ரசிகர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பொதுவெளியில் இவ்வாறு நடந்து கொள்ளும் இவர், தனிப்பட்ட முறையில் எவ்வளவு மோசமான நபராக இருப்பார் என கடுமையாக விமர்சித்தனர். இதைத் தொடர்ந்து ராம் கோபால் வர்மா தனது பதிவை நீக்கினார். இருப்பினும் ரசிகர்கள் அவரை சமூக வலைதளங்களில் தொடர்ந்து விமர்சித்து வருகின்றனர்.

# ஸ்ரேயாஸ் ஐயரை தேர்வு செய்யாதது நல்லதுதான் இந்திய தேர்வுக்குழுவை பாராட்டிய பனேசர்




இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஜூன்) முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தியாஇங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஜூன் 20ந் தேதி லீட்சில் தொடங்குகிறது. இந்த தொடருக்கான 18 வீரர்கள் கொண்ட இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. அகர்கர் தலைமையிலான தேர்வு குழுவினர் அணியை தேர்வு செய்து அறிவித்தனர்.

இந்த மாதம் தொடக்கத்தில் டெஸ்ட் போட்டியில் இருந்து கேப்டன் ரோகித் சர்மா ஓய்வு பெற்றதால் அடுத்த கேப்டன் யார்? என்று அதிக எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் எதிர்பார்த்தபடி சுப்மன் கில் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனால் அந்த அணியில் சமீப காலமாக தொடர்ச்சியான பார்மில் அசத்தி வரும் ஸ்ரேயாஸ் ஐயருக்கு இடமளிக்காத இந்திய தேர்வுக்குழுவை பல முன்னாள் வீரர்கள் விமர்சித்தனர்.

இந்நிலையில் இங்கிலாந்து தொடரில் ஸ்ரேயாஸ் ஐயரை கழற்றி விட்டு இந்திய தேர்வுக்குழு சிறந்த முடிவை எடுத்துள்ளதாக அந்நாட்டின் முன்னாள் வீரர் மான்டி பனேசர் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "இந்திய அணி நிர்வாகத்தினர் தந்திரத்தை தவற விடவில்லை என்று நான் நம்புகிறேன். ஸ்ரேயாஸ் மிகவும் சிறந்த வீரர். ஆனால் வேகம் மற்றும் ஸ்விங் ஆகக்கூடிய சூழ்நிலைகளில் அவர் தடுமாறக்கூடியவர் என்று நம்புகிறேன். அதற்கான நுட்பம் அவரிடம் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

அவருடைய சாதனைகள் சிறப்பாக உள்ளன. ஆனால் அது பிளாட்டான, சுழலுக்கு சாதகமான பிட்ச்களை கொண்ட சூழ்நிலைகளில் மட்டுமே நன்றாக இருக்கிறது. ஸ்ரேயாஸ் ஐயர் சூப்பர் ஸ்டார் என்று நினைக்கிறேன். ஆனால் வேகம் மற்றும் ஸ்விங் ஆகக்கூடிய சூழ்நிலைகள் என்று வரும் போது அதை சமாளிக்க அவரிடம் நுட்பம் இல்லை.

அவர் பந்தை வரவிட்டு விளையாடுவதில்லை. கைகளை வேகமாக நகர்த்தக்கூடிய அவருடைய கால்கள் அதிகம் நகர்வதில்லை. கண் ஒருங்கிணைப்பு சிறப்பாக இருக்கிறது. இது வேகம் மற்றும் பவுன்ஸ் ஆகக்கூடிய சூழ்நிலைகளுக்கு பொருந்தும். ஆனால் இங்கிலாந்து போன்ற ஸ்விங் ஆகக்கூடிய சூழ்நிலைகளுக்கு பொருந்துமா என்பது சந்தேகமாகும்" என்று கூறினார்

# அடுத்த ஐ.பி.எல். தொடருக்கு முன் இந்த 3 வீரர்களை அணிகள் விடுவிக்க வேண்டும் கும்ப்ளே




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், பஞ்சாப் கிங்ஸ் அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளருமான அனில் கும்ப்ளே, 2026 ஐ.பி.எல். மினி ஏலத்திற்கு முன்னதாக அணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தான் கருதும் வீரர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளார்.

அதன்படி சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் இடம்பெற்றுள்ள முகமது ஷமி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள ரவிச்சந்திரன் அஸ்வின் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள வெங்கடேஷ் ஐயர் ஆகியோரை அந்தந்த அணி நிர்வாகங்கள் விடுவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இந்த 3 வீரர்களும் அணிகளின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை என்று கூறியுள்ளார்.

மேலும் அடுத்த சீசனுக்கு முன் அணிகள் தக்கவைக்க வேண்டும் என்று தான் விரும்பும் வீரர்களையும் அவர் தேர்வு செய்துள்ளார்.

அதன்படி ரிஷப் பண்ட், மயங்க் யாதவ், (இருவரும் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்) ரவீந்திர ஜடேஜா (சென்னை சூப்பர் கிங்ஸ்), அஜிங்க்யா ரகானே (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்), நிதிஷ் குமார் ரெட்டி, இஷான் கிஷான் (இருவரும் சன்ரைசர்ஸ் ஐதராபாத்) மற்றும் துருவ் ஜூரெல் (ராஜஸ்தான் ராயல்ஸ்) போன்றவர்கள் அடுத்த சீசனில் அணிகள் தக்க வைத்துக் கொள்ளத் தகுதியானவர்கள் என்று கூறியுள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.